இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (27.03.2025) திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு67க்குட்பட்ட வீனஸ் பேருந்து நிலையம் அருகில் "மீண்டும் மஞ்சப்பை திட்டத்தின் கீழ் தானியங்கி துணிப்பை விற்பனை இயந்திரத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர்கள் எம். தாவூத் பீ, பி. அமுதா, சி. ஸ்ரீதனி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (27.03.2025) கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் 2025- 2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு, அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் அரசு துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) எஸ்.பி அம்ரித், கூடுதல் பதிவாளர்கள், இணைப்பதிவாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உசிலம்பட்டி ஒன்றியம்

அயன் மேட்டுப்பட்டியில் நியாயவிலைக்கடை அமைக்கப்படுமா?

சட்டப்பேரவையில் - உறுப்பினரின் கேள்விக்கு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதில்!

சென்னை, மார்ச் 28-

"உசிலம்பட்டி ஒன்றியம் அயன்மேட்டுப்பட்டியில் நியாய விலைக்கடை அமைக்கப்படுமா?" என்று சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினருக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலளித்தார்.

இது குறித்து சட்டப்பேரவையில் எழுப்பிய கேள்வி, பதில் வருமாறு:-

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்: உசிலம்பட்டி தொகுதியில் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம் வகுரணி ஊராட்சியில் அயன் மேட்டுப்பட்டி கிராமத்தில் 260 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாய விலைக்கடைகள் செயல்பட்டு வருகிறது. முத்தமப்பட்டி கிராமத்தில் உள்ள 95 குடும்ப அட்டைகளும் மேற்கண்ட கடைகளும் இணைக்கப்பட்டுள்ளது. முத்தமபட்டி கிராமத்தில் இருந்து அயன்மேட்டுப்பட்டி கிராமம் 1.05 கிலோ மீட்டர் தொலைவில் மட்டுமே உள்ளது, எனவே உத்தமபட்டி கிராமத்திற்க்கு தனியே நியாய விலைக்கடைகள் அமைப்பதற்க்கு வழிவகை இல்லை.

கேள்வி: உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதியில் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம் வகுரணி ஊராட்சி அயன்மேட்டுப்பட்டியில் சுமார் 260 கார்டுகள் உள்ளன. இம்முத்தயம்பட்டி கிராமம் அயன்மேட்டுப்பட்டியில் இருந்து 1.05 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. பொதுமக்கள் நடந்து வந்து வாங்கி செல்ல வேண்டிஉள்ளது, எனவே முத்தயன்பட்டி கிராமத்தில் பகுதி நேர கடை ஒன்று அமைத்துக் கொடுக்க அமைச்சர் முன் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கே.ஆர்.பெரியகருப்பன்: ஏற்கனவே இருக்கின்ற தாய் கடை மிக குறைந்த குடும்ப அட்டையோடு செயல்படுகிறது. ஆகவே 260 கார்டு இருக்கும் அந்த கடையில் இருந்து மேலும் ஒரு பகுதி நேர கடையை பிரிப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்று.

கேள்வி: பகுதி நேர கடை அமைக்காவிடில் நடமாடும் கடையாது அமைத்து தர வேண்டும். தொட்டப்பண் ஊராட்சி செட்டியப்பட்டி, நியாய விலைக்கடையில் 1086 கார்டுகள் இருக்கிறது. அதில் T. குண்ணத்துப்பட்டி 280 கார்டுகள் இருக்கின்றன. டி. குண்ணத்துப்பட்டி கிராமத்து மக்களே புதியதாக கட்டடம் கட்டி வைத்துள்ளார்கள். அது குறிப்பாக நியாயவிலைக் கடைக்காகவே கட்டி வைக்கப்பட்டுள்ளது. இளைஞர்களும், பொது மக்களும் இணைந்து கட்டிஉள்ளார்கள். எனவே செட்டியப்பட்டி நியாய விலைக்கடையில் இருந்து டி. குண்ணத்துப்பட்டிக்கு ஒரு பகுதி நேரக் கடையும் நல்லத்தேவன் பட்டி ஊராட்சியில் லிங்கப்பன் நாயக்கன்பட்டி என்ற கடைக்கு ஒரு பகுதி நேரக் கடையும் அமைத்து தருமாறும் அமைச்சர் முன் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்: போத்தம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பாக ஏற்கனவே 6 கடைகள் முழு நேரக் கடைகளாகவும், போத்தம்பட்டி, அயன்மேட்டுப்பட்டி, வகுரணி, அல்லிக் குண்டம், ராஜாக்காப்பட்டி, விருமார்பட்டி, என்ற முழு நேரக் கடைகளும், அயோத்திப்பட்டி , கணவாய்பட்டி, பெருமாள்கோவில்பட்டி, ரங்க சாமிபட்டி, என்ற 4 பகுதி நேரக்கடைகளும் செயல் படுகிறது. தேவையான அளவுக்கான கடைகள் அங்கே இருக்கிறது. தொட்டப்பண் நாயக்கன் கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் செட்டியப்பட்டி நியாயவிலைக் கடையை பிரித்து குண்ணத்துப்பட்டியில் புதிய பகுதி நேரக் கடை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற கோரிக்கை நியாயமாக இருப்பினும் அதன் இடைப்பட்ட தூரத்தின் தொலைவு ½ கிலோ மீட்டராக இருப்பதால் இயலாத காரியமாக உள்ளது.

கேள்வி: நாகப்பட்டினம் மாவட்டத்தில் பகுதி நேர நியாயவிலைக் கடைகள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்ட இயலாது என்று தெரிவிக்கிறார்கள். பேரவை தலைவரை சந்தித்த போது என் தொகுதியில் 25 கடைகள் கட்டியிருப்பதாக தெரிவித்தார்கள். எனவே எங்கள் மாவட்டத்திலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பகுதி நேர நியாயவிலைக் கடைகள் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்: குறிப்பாக முழு நேரக்கடைகளுக்குதான் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவூதியத்திட்டத்தின் கீழ் வரக்கூடிய நிதியை பயன்படுத்த முடியும். பகுதி நேரக் கடைகளுக்கு அந்த நிதியை பயன்படுத்த முடியாது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை பயன்படுத்துவதில் எந்த தவறும் இல்லை. மாவட்ட ஆட்சியரிடம் அதைக்குறித்து கேட்டு, மேலும் திட்ட இயக்குநர் சட்டமன்ற இயக்குநர் நிதி கொடுக்கும் பட்சத்தில் அதை பகுதி நேரக் கடைக்கு பயன்படுத்தலாம்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலளித்தார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் சார்பில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத் தலைவர் மேனாள் நீதிபதி.நீதியரசர் முனைவர் ச.தமிழ்வாணன் அவர்கள் தலைமையில் 25.03.2025 அன்று கள ஆய்வுக் கூட்டம் அலுவலர்களுடன் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், துணைத்தலைவர் இமயம் (வெ.அண்ணாமலை), உறுப்பினர்கள் முனைவர் சு.ஆனந்தராஜா, பொ.இளஞ்செழியன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.மு.பாலகணேஷ் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

100 நாள் வேலை உறுதித் திட்ட நிதி கோரி

இராணிப்பேட்டை மாவட்டத்தில் 18 இடங்களில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, மார்ச் 28-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. ஒன்றிய செயலாளர்களுக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள் வருமாறு:-

ஒன்றிய அரசு 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ் நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி நிதியை வழங்காமல் தமிழ் நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் 29.3.2025 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின்படி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:-

அரக்கோணம் சட்டமன்ற தொகுதி

1) அரக்கோணம் கிழக்கு -முள்வாய், புளியமங்களம்,

2) அரக்கோணம் மத்தியம் தணிகை போளூர், வடமாம்பாக்கம்,

3) அரக்கோணம் மேற்கு சாலை பஸ்நிலையம், குருவராஜப்பேட்டை பஸ்நிலையம்,

4) நெமிலி கிழக்கு - சேந்தமங்கலம், கடம்பநல்லூர்

சோளிங்கர் சட்டமன்ற தொகுதி

5) நெமிலி மத்தியம் - கீழ்வீதி, நாகவேடு

6) நெமிலி மேற்கு - திருமால்பூர், மேலபுலம் புதூர்

7) சோளிங்கர் கிழக்கு - கூடலூர், பரவத்தூர்

8) சோளிங்கர் மத்தியம் கொடைக்கல் மோட்டூர், பானாவரம் கூட்ரோடு

9) சோளிங்கர் மேற்கு - வேலம், ஜம்புகுளம் கூட்ரோடு

10) காவேரிப்பாக்கம் தெற்கு - ஓச்சேரி, பெரும்புலிபாக்கம்

11) காவேரிப்பாக்கம் வடக்கு பன்னியூர் கூட்ரோடு, பானாவரம்

இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி

12) வாலாஜா மத்தியம் விசி மோட்டூர் அண்ணா சிலை அருகில், சிப்காட் பஸ்நிலையம் அருகில்,

13) வாலாஜா கிழக்கு - வள்ளுவம்பாக்கம், குடிமல்லூர்

14) ஆற்காடு மேற்கு - பூட்டுத்தாக்கு, உப்புப்பேட்டை

ஆற்காடு சட்டமன்ற தொகுதி

15) திமிரி கிழக்கு - மாம்பாக்கம், வாழைப்பந்தல்

16) திமிரி மேற்கு - காவனூர், தாமரைப்பாக்கம்

17) ஆற்காடு கிழக்கு - தாஜ்புரா, கலவை கூட்ரோடு

18) கணியம்பாடி - கணியம்பாடி, மூஞ்சூர்பட்டு

மேற்கண்ட இடங்களில் ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நமது மாவட்டத்தில் உள்ள ஒன்றிய கழக செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்து கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திடு மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கையில் கூறியுள்ளார்.

'திராவிட மாடல்' ஆட்சி ஏற்பட்ட பிறகு

'சக்தி'கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்!

சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!

சென்னை, மார்ச். 28-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (27.03.2025) வினா - விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் டி.எம்.தமிழ்செல்வம் மற்றும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி அ.தமிழரசி ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

டி.எம்.தமிழ் செல்வம்: ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி, காட்டேரி ஊராட்சியில் உள்ள அனுமந்தீர்த்தம் கிராமம், அருள்மிகு அனுமந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் அமைக்க அரசு முன்வருமா ?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு அனுமந்தேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமாக இடமும் இல்லை நிதியும் இல்லை. இருந்தாலும் அவரது கேள்விக்கு மறுப்பு ஏதும் சொல்லாமல் அருகிலே இருக்கின்ற மற்றொரு திருக்கோயிலான அருள்மிகு மயிலாடும் பெருமாள் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் திருமண மண்டபம் கட்டித் தருவதற்கு உண்டான முயற்சிகளை நிச்சயம் மேற்கொள்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டி.எம்.தமிழ் செல்வம்: ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி கல்லாவி ஊராட்சியில் வேடியப்பன் கோயில் உள்ளது. ஊத்தங்கரை சுற்றியுள்ள கிராம மக்கள் இந்த கோயிலில் திருமணம், காதுகுத்து, முடிகாணிக்கை செய்தல் பலர் ஒன்று கூடி ஆடு, கோழி நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர். செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அங்கே சமைத்து உணவருந்துகின்றனர். எனவே கோயிலுக்கு மண்டபம் கட்டித்தர தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கூறியதை ஏற்றுதான் நிச்சயமாக இந்த மண்டபம் கட்டித் தரப்படும் என்று சொல்லி இருக்கின்றேன். இந்த ஆண்டு கூட 30க்கும் மேற்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் திருமண மண்டபம் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதனை தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று தேவைப்படும் இடங்களில் நிச்சயம் திருமண மண்டபங்கள் ஏற்படுத்தி தரப்படும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 85 திருமண மண்டபங்கள் சுமார் 347 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றது. அதில் இதுவரையில் 24 திருமண மண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டு பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை பேரவை தலைவர் வாயிலாக இந்த மன்றத்தில் பதிவு செய்கிறேன். உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றி தரப்படும். அதற்குண்டான ஆய்வுகள், சாத்திய கூறுகள் ஆராயப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டி.எம்.தமிழ் செல்வம்: ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி ஊத்தங்கரை நகரில்உள்ள காசி விஸ்வநாதர் திருக்கோயில் நூறாண்டுகள் பழமையான கோயில். இக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை மூலம் பக்தர் களுக்கு அன்னதானம் வழங்க அரசு ஆவணம் செய்யுமா என தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கூறிய பழமையான திருக்கோயிலில் பக்தர்கள் வருகை மிக குறைவாக இருக்கின்றது. இருந்தாலும் உறுப்பினர் வைத்த கோரிக்கையை ஏற்று வாரத்தில் எந்த நாட்களில் அந்த திருக்கோயிலுக்கு பக்தர்கள் அதிகமாக வருகிறார்களோ அந்த ஒரு நாளைக்காவது நூறு பேருக்கு குறைவில்லாமல் அன்னதானம் வழங்கும் திட்டத்தை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்துவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தமிழரசி: பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் முருகன் மாநாடு நடத்தி பக்தர்கள் உள்ளத்தை கொள்ளை கொண்டது போல, சமத்துவம் பேணுகின்ற தாய் உள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் சக்தி மாநாடு நடத்தி சமத்துவம் பேணப்படுமா என்பதை அமைச்சர் அவர்களே அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு சக்திகள் மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள் என்பதை நம்முடைய உறுப்பினர் நன்றாக அறிவார்கள். முதல்வர் அவர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் இருளைப் போக்குகின்ற ஒளி தருகின்ற வழிபாடு என்று கருதப்படுகின்ற திருவிளக்கு பூஜையை முதல் முதலில் அமைச்சர் அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களோடு இணைந்து குலசேகரபட்டினம், அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோயிலில் தொடங்கி வைத்தோம். தீபஒளி ஏற்றுகின்ற பௌர்ணமி திருவிளக்கு பூஜை இன்றைக்கு 20 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு இதுவரையில் 58,600 பக்தர்கள் பலனடைந்திருக்கின்றார்கள். அதே போல் கடந்த ஆண்டு ஆன்மீகப் பயணத்தை ஏற்படுத்தி 1,031 சக்திகள் அந்த ஆன்மிக பயணத்திலும் பயனடைந்திருக்கின்றார்கள். குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 60,000 சக்திகள் பயனடைந்து இருப்பதால் சக்தி மாநாடு என்று ஒன்று தனியாக தேவைப்படவில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலளித்தார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

அன்னம் தரும் அமுதகரம் 36வது நாள்!

கொளத்தூர் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மார்ச் 28-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 36வது நாள் கொளத்தூர் கிழக்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உணவு வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 36 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளில் நேற்று (27.3.2025) கொளத்தூர் கிழக்கு பகுதி 1) சுப்பிரமணி தோட்டம், சென்னை (67 வட்டம்) 2) திரு.வி.க.நகர் பேருந்து நிலையம் அருகில், சென்னை (67அ வட்டம்) ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், கே.சாரதா, டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி. ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.